

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.6.2025) முகாம் அலுவலகத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் சந்தித்து, சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். உடன் திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.6.2025) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று வெளியிடும் “வள்ளுவர் மறை வைரமுத்து உரை” நூல் வெளியீட்டு விழாவிற்கான முதல் அழைப்பிதழை வழங்கினார். உடன், அவரது மகன்கள் மதன் கார்க்கி மற்றும் கபிலன் உள்ளனர்.







முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தொழில் வணிகத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமதி புதுக்கோட்டை விஜயா மற்றும் உறுப்பினர்கள் – டாக்டர் எம். கசிமிர் ராஜ், டாக்டர் மோனா மெட்டில்டா பாஸ்கர், திருமதி ஆர். ஜெயசுதா, டாக்டர் வி.உஷாநந்தினி, வி.செல்வேந்திரன், திருமதி ஸ்ரீ காவியா நாகராஜன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் ஜானி டாம் வர்கீஸ் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி மற்றும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பழங்குடியினர் நல வாரியத்தின் தலைவர் திருமதி கா.கனிமொழி ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம், முகாம் அலுவலகத்தில், முரசொலி கணக்குப் பிரிவில் பணிபுரியும் ஜி.புஷ்பராணி – எல்.கிளைமண்ட் ராஜ் ஆகியோர் சந்தித்து தமது புதல்வர் சி.ஆலன் எட்வின் ராஜ் – ஏ.ரேஷ்மா ஆகியோரது திருமண விழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், லயோலா கல்லூரியில் ஆங்கிலத் துறையில் முனைவர் பட்டம் பெற்று அக்கல்லூரியிலேயே உதவி பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ள திருநங்கை முனைவர் ஜென்சி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் லயோலா கல்லூரி ஆங்கிலத் துறை தலைவர் டாக்டர் மேரி வித்யா பொற்செல்வி உள்ளார்.